# ரோஜாக் வியாபாரிக்கு $9,000 அபராதம்

உண்பதற்கு ஏற்பில்லாத உணவை விற்றதற்காகவும், அசுத்தமான வெட்டுப்பலகையையும் குளிர்பதனப் பெட்டி அடுக்கையும் வைத்திருந்ததற்காகவும், முன்னாள் "இந்திய ரோஜாக்" வியாபாரி ஷேக் அலாவுதின் மொஹிதீனுக்கு நேற்று அதிகபட்சமாக $9,000 அபராதம் விதிக்கப்பட்டது.

எழுபது வயது ஷேக் அலாவுதினின் செயலால், சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் அவரது கேலாங் செராய் கடையில் ரோஜாக் சாப்பிட்ட 154 பேர் உணவு நச்சு பாதிப்பால் நோயுற்றனர். அவர்களில் இருவர் மரணமடைந்தனர். மொத்தம் நாற்பத்தெட்டு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மற்றவர்கள் வெளிநோயாளி சிகிச்சை பெற்றனர்.

குளிர்பதனப் பெட்டி அடுக்கையும் வெட்டுப்பலகையையும் சுத்தமாக வைத்திருக்கத் தவறியதாக ஷேக் அலாவுதின் ஒப்புக்கொண்டார். அதோடு, உண்பதற்குத் தகுதியற்ற ரோஜாக் விற்றதாகவும் அவர் ஒப்புக் கொண்டார்.



படம்: தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

ஷேக் அலாவுதின் மொஹிதீன் (70)

உணவுச் சுகாதாரத் தரத்தைக் கட்டிக்காப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஷேக் அலாவுதினுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்குமாறு தேசிய சுற்றுச்சூழல் முகவையின் மூத்த வழக்குரைஞர் அப்துல்லா கனி கேட்டுக் கொண்டார்.

உணவு நச்சு பாதிப்பு ஏற்பட்டவுடனே கடைக்குச் சென்ற அதிகாரிகள், கடை அழுக்காக இருந்ததையும் கரப்பான்பூச்சிகள் ஓடித் திரிந்ததையும் கண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கடந்த ஓராண்டாகக் கடை நடத்த இயலாததால் பணப் பிரச்னையில் இருப்பதாகக் கூறினார் ஷேக் அலாவுதின். கேலாங் செராய் உணவு நிலையத்தில் புதிய கடை நடத்த அவரது மனைவி இப்போது உரிமம் பெற்றிருக்கிறார்.